**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 699/2024**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 06.02.2026.**

| | |
|---|---|
| **Name : பிரபு** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது தீவட்டிப்பட்டியில் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022-ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, கடந்த 08.11.2022-ம் தேதி ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற காயத்தகவலின் பேரில் உதவி ஆய்வாளர் மாதையன் உத்தரவின் பேரில் நான் மருத்துவமனை சென்று சதீஷ்குமார் (30) த/பெ பழனிசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். பின்னர் விசாரணைக்கு பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக தெரிந்துகொண்டேன். நான் வாக்குமூலம் பதிவுசெய்தபோது எழுதப்பட்ட குறிப்பில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ. 8** ஆகும். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

2) இவ்வழக்கில் யாரிடம் வாக்குமூலம் பதிவுசெய்தேன் என்றால் சதீஷ்குமார் ஆவார். சதீஷ்குமார் தனக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்று

சொல்லியுள்ளார் என்றால் நான் வாக்குமூலம் பதிவுசெய்யும்போது அவ்வாறு சொல்லவில்லை.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.